Registered as a NewsPaper

விலை ரூபா–07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 1[illegible]5 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –28 | 11–03–2004 | வியாழக்கிழமை | ஓசை –022

உங்களிடம் தேவை இருக்கிறது
எங்களிடம் கைதேர்ந்த நகைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்



கணேசா நகையகம்

194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-9260)

123,பஜார் வீதி, வவுனியா.

# மட்டு. இல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்காணிப்புக்குழுவின் பணி இடைநிறுத்தம்

## மாவட்டத் தலைமைக் கண்காணிப்பாளர்கள் தெரிவிப்பு

**மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள பகுதியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளதாக மாவட்டத் தலைமைக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

கருணாவால் எழுந்துள்ள நெருக்கடிகளையடுத்தே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது எனத்தெரிவித்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைமைக் கண்காணிப்பாளர் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போர் நிறுத்த உடன்படிக்கையில்கைச் சாத்திட்டிருப்பதை சுட்டிக்காட்டி அந்த அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினருடன் தொடர்பு கொண்டு போர் நிறுத்தப் பணிகளில் ஈடுபட முடியாது என்றும் கூறியுள்ளார்.

இருப்பினும் மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது பணிகள் வழமைபோல் தொடரும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த மார்ச்-3ஆம் திகதிக்குப் பின்பு இம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை காரணமாக அதற்குப் பின்பு கிடைக்கின்ற முறைப் பாடுகளை தனியாகப் பதிவு செய்து கையாள வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

## எரிக்சூல் ஹெய்ம்-தமிழ்ச்செல்வன் கிளி. இல் இன்று சந்திப்பு

(அலுவலகசெய்தியாளர்)

நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம், இலங்கைத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆகியோர் யாழிலிருந்து தரைவழிப் பாதையூடாக நேற்று மாலை கிளிநொச்சி வந்தடைந்தனர்.

இவர்கள் இன்று பகல் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை சந்தித்து தற்போதைய சூழ்நிலைகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. நோர்வே நாட்டின் இலங்கைக்கான விசேட சமாதானத்தூதர் எரிக்சூல்ஹெய்ம் இன்று வியாழக்கிழமை திருகோணமலைக்கு வருகின்றார். வன்னி விஜயத்தை முடித்துக்கொண்டு வியாழக் கிழமை மாலை திருகோணமலைக்கு எரிக்சூல்ஹெய்ம் இலங்கை இராணுவத்தின் திருமலை மாவட்டக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், கடற்படை உயரதிகாரிகளை சந்தித்துப் பேசுவார் என்று கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட (8ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் உள்விவகாரங்களில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தலையிடாது

### -நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்கெய்ம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அதன் உள்விவகா[illegible]ம் என்றும் இதில் போர் நிற[illegible]க் கண்காணிப்புக் குழுவி[illegible] தலையிட மாட்டார்கள் என்றும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சூல் கெய்ம் தெரிவித்துள்ளர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தம் செய்யப்பட்டு இரண்டு வருடம் பூர்த்தியடைந்துள்ள இந்த வேளையில் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேசங்களில் நிலவுகின்ற அரசியல் பொருளாதார, புனர் வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிலைமைகளை நேரடியாக அறிவதற்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அவதானிகளாக கடமையாற்ற எட்டு தேசிய அமைப்புக்களுக்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலின் போது அவதானிகளாக கடமையாற்றுவதற்கு 08 தேசிய அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் நிலைத்தற்கும் சுதந்திரமான நேர்மையான, தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பிற்கும் மட்டுமே வாக்களிக்கும் நிலையங்களுக்குச் சென்று அவதானிப்புக்களை மேற்கொள்ள தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

## ஐ.தே.கட்சியின் 5ஆவது வேட்பாளர் மட்டு. இல் போட்டியிலிருந்து விலகினார்

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் மற்றுமொரு வேட்பாளர் நேற்று போட்டியிடுவதிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

ரூபசிங்க குமாரதாஸ என்ற இந்த வேட்பாளர் தனது உடல் நல பாதிப்பு மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து மாவட்டத்தின் எட்டு வேட்பாளர்களில் 5பேர் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் உள்ளகப் பிரச்சினையை அவர்களே தீர்ப்பார்கள் என்பதே ஐ.தே.முன்னணியின் நிலைப்பாடு

### அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள உள்ளகப் பிரச்சினையாகும். அதனை அவர்களே விரைவில் தீர்த்துக்கொள்வார்கள் என்பதே ஐக்கியதேசிய முன்னணியின் நிலைப்பாடாகும் மென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இப்பிரச்சினையைப் பயன்படுத்தி தென்னிலங்கை அரசியல் கட்சிகள், அரசியல் இலாபம் தேட முனையக் கூடாது என தமது கட்சி வேண்டுகோள் விடுப்பதாகவும் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டார். அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சு நடாத்தும் நிலையில் தென்னிலங்கைக் கட்சிகள் இதில் தலையிடுவதானது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவே உதவுமென அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்தியில்ஏற்பட்டுள்ள பிரச்சினையைச் சாதகமாகப் பயன்படுத்தி வேலுப்பிள்ளை பிரபாகரனை அழித்துவிட வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலை (8ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் தூதுவர்–புலிகள் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு?

(கொழும்பு)

இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிக்கு வரும் இவர் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து தற்போதைய சூழ்நிலை குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் தெரியவருகிறது.

## புலிகள் போருக்கு ஆயத்தம் செய்கின்றனர்; கருணாவின் குற்றச்சாட்டு பொய்ப்பிரச்சாரமாகும்

### மட்டு - அம்பாறை விசேட தளபதி ரமேஸ்

(லண்டன்)

விடுதலைப்புலிகள் போர் ஆயத்தங்களை மேற்கொள்கின்றார்கள் என்ற கருணாவின் கருத்து அவரால் பரப்பப்படும் பொய்யான பிரச்சாரமாகும்.

கடந்த காலங்களில் அவர் அடிக்கடி தலைவரிடம் சென்று வருவார். வெளிநாடுகளுக்கு பேச்சுவார்த்தைக்கு சென்று வருவார். வரும் போது அவர் எங்களிடம் எங்களது தலைவரிடம் அடிக்கடி கூறுவார். தலைவருக்கு போரிற்கு விருப்பமில்லை. போரை நடத்துவது அவருடைய நோக்கமில்லை. அரசியல்ரீதியாக தமிழ் மக்களுக்கு ஒரு விடுதலையை எடுக்க வேண்டும் இனி அழிவு வராமல் சர்வதேச ரீதியாக எங்களது தமிழ் மக்களுடைய விடுதலைக்கான நியாயத்தை விளங்கப்படுத்தி தமிழர்களுக்கு அரசியல் ரீதியான ஒரு விடிவை எடுக்க வேண்டும் என்பதில் தலைவர் உறுதியாக நிற்கின்றார் என்பதை எங்களுக்கு அடிக்கடி கூறுவார்.

ஆனால் தற்பொழுது தன்னுடைய பிரச்சினையை மூடி மறைப்பதற்காகத் (8ஆம் பக்கம் பார்க்க)

## சிறி. பொலிசாருக்கெதிராக யாழ். இல் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பொலிசார் முஸ்லிம்கள் மீதான தாக்குதல், ஆட்கடத்தல்கள் குறித்து முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்காதிருப்பதைக் கண்டித்து நேற்று யாழ். பொலிஸ் நிலையம் முன்பாக சுமார் ஐநூறு முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் பற்றி மேலும் தெரியவருவதாவது; யாழ்ப்பாணத்தில் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம்களிடையே உள்ள சிறுபிளவுகளை தமக்குச்

(8ஆம் பக்கம் பார்க்க)

# வாக்குப் பெட்டிகளை மத்திய நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் பணி விமானப்படையிடம்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுத்தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு முடிந்ததும் வாக்குப் பெட்டிகளை வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான பணியினை விமானப்படையினரிடம் ஒப்படைக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து விமானப் படையின் தளபதி டொனால்ட் பெரேராவுடன் தேர்தல் ஆணையாளர் இரு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து இதற்கான இணக்கம் காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பினை வழங்க விமானப்படைத் தளபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் பெண்கள் தினம்

வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் பெண்கள் சிறுவர்களுக்கான உப குழு நடாத்திய சர்வதேச மகளிர் தின வைபவம் மார்ச் மாதம் 08ஆம் திகதி வவுனியாவில் இடம் பெற்றது.

வவுனியாவில் பல பாகங்களில் வசிக்கும் பெண்கள் ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஒன்றாகச் சேர்ந்து மௌன எழுச்சி ஊர்வலத்தை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்பாக இருந்து ஆரம்பித்து நகர்ஊடாக றொயல் திரையரங்கை காலை 11.00 மணியளவில் வந்தடைந்தனர். கனரா நிறுவனத் தலைவி அருட் சகோதரி றீட்டா அம்மையார் தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றது.

இன்றைய பெண்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். தங்களுக்குள் ஓர் விழிப்புணர்வு வந்தால் தான் இன்று வவுனியா மாவட்டத்திலுள்ள இவ்வளவு பெண்கள் அனைவரும் ஒன்றாகக் கூடியுள்ளோம். முன்னொரு காலத்தில் கீழைத்தேசம்/ மேலைத்தேச சமூகங்கள் பெண்களை ஒரு ஆணின் சொத்தாகப் பயன்படுத்தியதுடன் பேச்சு , எழுத்து, வாக்கு, கல்வி, சமூக வேலைகளுக்குச் செல்லுதல் போன்ற சுதந்திரங்கள் மறுக்கப்பட்டு வந்தன.

ஆனால் இன்று பல்வேறு வகையில் பெண்கள் வளர்ச்சி பெற்றுள்ளார்கள். கல்வி, சுகாதாரம், பாதுகாப்புப் படைகள், விமானப்படை, பல்கலைக்கழகம், வைத்தியம், சட்டம், நிர்வாகம், நிதி போன்ற பல்வேறு துறைகளிலும் பெண்கள் வளர்ச்சி கண்டுள்ளார்கள். ஆனால் முழுமையான வளர்ச்சியை பெறவில்லை என்பதே குறையாக வுள்ளது. அதனைப் பெற்றுக் கொள்வதற்கு பெண்கள் தானாக முன்வரவேண்டும். அரங்க நிகழ்வில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

# மாதர், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளுக்கு பயிற்சி

(பூநகரி)

பூநகரிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகிகளிற்கான பயிற்சிப்பாசறை நேற்று பிரதித்திட்டப் பணிப்பாளர் வினோதராஜ் தலைமையில் 4ஆம் கட்டைப்பகுதியில் அமைந்துள்ள பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழகத்தில் நடைபெற்றது. இப்பட்டறையில் ஜெயபுரம்வடக்கு, ஜெயபுரம் தெற்கு, கரியாலை நாகபடுவான், பள்ளிக்குடா, நாலாம்கட்டை, செல்லையாதீவு, சாமிப்புலம் ஆலங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இப்பட்டறையில் மாதர் சங்கத்தின் முக்கிய பணிகள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைக்கப்பட்டது. (34)

# அரசியல் சூழ்நிலை குறித்து பூநகரியில் கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரியில் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் பள்ளிக்குடா சுண்ணாவில் அ.த.க.பாடசாலையிலும், மாலையில் 4ஆம் கட்டை சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் கலந்துரையாடல் நடைபெற்றது.


பூநகரியில் பல பிரதேசங்களில்தொடர்ந்து நடைபெற்று வரும் இக்கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் குகன் கடற்புலிகளின் பூநகரி அரசியல்துறைப்பொறுப்பாளர் வேங்கைத்தமிழன், பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் பாலாஜி. வலயப் பொறுப்பாளர் றூபன், மற்றும் கிராமசேவகர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (34)

# உபசனாதிபதியாக பேரியல் அஷ்ரப்

பேரியல் அஷ்ரப்பை உபசனாதிபதியாக நியமிக்கப்படுவதை எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்று தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ) செயலாளர் சேகுஇஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமைத்துவத்தை இந்த நாடு தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் வகையில் அரசியலமைப்பில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு ஐ.ம.சு. முன்னணியின் வெற்றியை முஸ்லிம்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சேகு இஸ்ஸதீன் கேட்டுள்ளார்.

# 18ஆம் ஆண்டு நினைவலைகள்



## வீரவேங்கை றஞ்சன்

*(சரவணமுத்து சத்தியசீலன்)*

**பிறப்பு**
**08.05.1968**

**வீரமரணம்**
**11.03.1986**

ஆற்றலுள்ள அண்ணன் வழியினிலே
ஆயுதம் தனை கையிலேந்தி
புலியாகப் புறப்பட்டு
புதிய வரலாறு படைத்திட்ட
எம் அருமை வீரனே

நீ சிந்திய குருதி எங்கள்
விடுதலைப் பயிருக்கு நீரானது
உன்னைச் சுமப்பதால் காலந்தோறும்
கல்லறைகூட பெருமையடையும்.

உன் நினைவுகளை நெஞ்சில் சுமந்து
உன் கனவுகளை நனவுகளாக்கி
நாமும் உன்பணி தொடர்வோம்.

**குடும்பத்தினர்**
89, பாலிநகர், வவுனிக்குளம்.

(3644)

# வைகறை முன்பள்ளி திறப்பு விழா

(அலுவலகசெய்தியாளர்)

வைகறை முன்பள்ளி திறப்பு விழா நாளை மறுதினம் 12ஆம திகதி பி.ப.3.00 மணிக்கு கிளி. அக்கராயன் மகாவித்தியாலத்திற்கருகாமையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும்; நொறாட் நிறுவனநிதியுதவியுடனும், வன்னிக்கருத்திட்டத்தின் கீழ் போரூட்,அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற்படி முன்பள்ளி மண்டபம் அமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# காணிவிடயம் குறித்து நடைமுறை அறிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

யுத்தத்தினால் பாதிக்கப்பெற்ற கிளிநொச்சி மாவட்டம் தற்போது மீளப்புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் திட்டமிடப்பெற்ற நகராக்கம் கிளிநொச்சிக்கு அவசியமானதாகும். இதன் காரணமாக சில ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இதற்கமைவாக காணிவிடயம் சம்பந்தமாக பொதுமக்கள் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கிளி. அரசஅதிபர் தி.இராசநாயகம் வேண்டுகை விடுத்துள்ளார்.

1.இதுவரை புதுப்பிக்கப்படாத வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் யாவும் இரத்துச் செய்யப்படுகின்றன. இவ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பெற்ற காணிகளில் சில நகரமாக்கல் திட்டத்தின் கீழ் முக்கிய அரச தேவைக்குத் தேவையானபடியினால் மீளப்பெறப்படவுள்ளன. எனவே வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் 31.04.2004ந் திகதிக்கு முன்பு புதுப்பிக்கப்பட வேண்டும்.

2.இதுவரை குத்தகைப்பணம் செலுத்தாத சகல நீண்டகால, குறுங்கால குத்தகை அனுமதிப் பத்திரத்திற்கு விநியோகிக்கப் பெற்ற காணிகள் அனைத்தும் அரசுடமையாகின்றது. இவ்விடயஞ் சம்பந்தமாக புதிய விண்ணப்பங்கள் பெற்றுப் பரிசீலனையின் பின்பு மீள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

3.அனுமதிப்பத்திரமின்றி எக்காணிகளையும் [illegible] துப்புரவு செய்யவோ, கைய[illegible]கப்படுத்தவோ முடியாது. பிரிவுக்[illegible]ிராம அலுவலகர்களிடம் அக்[illegible]காணியில் வசித்தமை பற்றிய உ[illegible]ரிய ஆவணங்கள், ஆதாரங்கள[illegible]ச் சமர்ப்பித்து அனுமதி பெற்[illegible] பின்பே காணிகளைத் துப்புரவ[illegible] செய்ய வேண்டும். பொன்னகர[illegible] கிராம அலுவலர் பிரிவிலுள்ள [illegible] அறிவியல்நகர் திட்டமிடப்பட்ட [illegible] அறிவியல் வலயமாகும். ஐய[illegible]ன்குளம் அலைகரை உட்பட இப்பிர[illegible]தேசத்தில் காடுகளை அழிப்பது, [illegible]காணிகளை கையகப்படுத்துவது [illegible] சட்டவிரோதமான செயலாகும்.

4.காணிகளை விற்பது, வாங்கு[illegible]வது சட்டவிரோதமானது. காணிகளை இரத்த உறவுள்ளவர்களுக்கே உரிமை மாற்றம் செய்ய முடியும். எனவே இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. காணிகள் சம்பந்தமாக ஏதும் விபரங்கள் தேவையெனில் கரைச்சி உதவி 'அரசாங்க அதிபரை நேரில் சந்தித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.(சோ)

# ஐ.ம.சு.மு.இன் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படுமாம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம்இன்று வெளியிடப்படும்.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபன பிரசுரங்களை வீடுவீடாகச் சென்று மக்களுக்கு விநியோகிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தீர்மானித்துள்ளதாக செயலாளர் மைத்திரிபால சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் இத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது. பொருளாதாரக் கொள்கைகள், தேசிய பிரச்சினைகள், நாட்டில் சனநாயகத்தை உறுதிப்படுத்துதல், புதிய கலாச்சாரங்களை ஆரம்பித்தல், வெளிநாட்டுக் கொள்கைகள் மீள் பரிசீலனை செய்வது போன்றவைகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ளது.


# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளை

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையில் புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளல், காலாவதியான அங்கத்துவத்தை புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 25.03.2004 வியாழக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ளது. எனவே புதிதாக இணைத்துக் கொள்ள விரும்பும் அங்கத்தவர்களும் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அங்கத்தவர்களும் 2004.03.25க்கு முன் கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பளை பிரிவுக்கிளைகளுடன் அல்லது மாவட்டக் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன். 'நன்றி'

**க.கணேஸ்**
**கௌரவ செயலாளர்.**

(சி-9414)



# போதுச் சுகாதார பரிசோதகர் பயிலுனருக்கான பணிநிலை விண்ணப்பம்

தமிழீழ சுகாதார சேவைகள் நிறுவனத்தில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கான வெற்றிடம் நிரப்பப்படவுள்ளதால் கீழ்க்காணும் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணபங்கள் கோரப்படுகின்றன.

1. க.பொ.த.சாதாரணதரம், உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 18-35 வயதிற்குட்பட்ட ஆண்களாக இருத்தல்.
3. சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருக்க வேண்டும்.

மேற்படி விண்ணப்பத்தினை தங்கள் சுயகையெழுத்தில் நிரப்பி 22.03.2004ற்கு முன்னதாக தமிழீழ சுகாதார சேவைகள், நடுவப்பணியகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பணிப்பாளர்,*
*தமிழீழ சுகாதார சேவைகள்.*

(சி-9413)

# தென்னாசியப் பிராந்தியத்தின் அமைதிக்கு ஒத்துழைப்பு நல்க பாகிஸ்தானிடம் வேண்டுகை!

## சகீன் -II ஏவுகணை வெற்றிகரமாகப் பரிசோதனை

**தென்னாசியப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட தனது அணுவாயுதங்கள் மற்றும் ஏவுகணைத் திட்டங்களில் கவனம் செலுத்துமாறு பாகிஸ்தானிடம் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**


சகீன்-II ஏவுகணையை பாகிஸ்தான் பரீட்சித்துப்பார்த்ததைத் தொடர்ந்து அமெரிக்கா இவ்வாறு கூறியுள்ளது.

ஏனைய பகுதிகளிலுள்ள மற்றைய நாடுகளையும் அவற்றின் அணுவாயுதம் மற்றும் ஏவுகணைத் திட்டங்களில் கவனம் செலுத்துமாறு வாஷிங்டன் வலியுறுத்தியுள்ளதென வெளியுறவு செய்தித்தொடர்பாளர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கிடையே பாகிஸ்தானில் இச்சோதனை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட அக்கினி-2ஏவுகணைக்கு பதில் நடவடிக்கையாக பாகிஸ்தான் இச் சோதனையை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அணுவாயுதங்களைத் தாங்கிச் செல்ல வல்ல இந்த ஏவுகணை 2000கிலோ மீற்றர் தூரம் சென்று குறித்த இலக்கைத் தாக்கவல்லது என குறிப்பிடப்பட்டுள்ளது.



பாகிஸ்தான் நேற்று முன்தினம் பரிசோதனை செய்த சகீன்-II ஏவுகணை.

# தனியார் மயமாக்கலை எதிர்த்து அரச ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக அரசாங்க ஊழியர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை நேற்று முன் தினம் நடத்தியுள்ளார்கள்.

இதில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர். தாய்லாந்தில் அரச துறைகள் பலவற்றை தனியாரிடம் ஒப்படைக்க பிரதமர் முடிவு செய்துள்ளார்.

இத்திட்டத்திற்கு அரச ஊழியர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இருந்தபோதும் அரசதுறைகள் பலவற்றை தனியார் மயப்படுத்துவதில் பிரதமர் உறுதியுடன் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

## அமைச்சரவையில் ஆட்குறைப்பு

ரஷ்ய சனாதிபதி விளாடிமர் புட்டின் தமது அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.ரஷ்யாவின் புதிய சனாதிபதித் தேர்தலில் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனடிப் படையில் அமைச்சர்களின் எண்ணிக்கை30இல் இருந்து 17 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

# பலஸ்தீன போராளி அபு அபாஸ் சிறையில் மரணம்!

பலஸ்தீன போராட்டத்தில் முக்கிய நபராக கருதப்பட்ட 'அபு அபாஸ்' இறந்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த வேளை இதய நோயினால் கடந்த திங்கட்கிழமை இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இவர் அமெரிக்க இராணுவத்தினரால் ஈராக்கில் வைத்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சேதமடைந்த காரொன்றை அவதானிக்கும் ஈராக்கிய பொலிசார் ஒருவர். மொசூலில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்ற மோதலில் இக்கார் சேதமடைந்தது இதில் நான்கு பொலிசார் காயமடைந்ததோடு தாக்குதல் நடத்தியவர்களில் மூவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானுடன் நல்லுறவைப் பேணி வந்தாலும் படையினர் விழிப்புடன் இருப்பது அவசியம்

## -இந்தியத் துணைப் பிரதமர் அறிவுறுத்து

(புதுடில்லி)

எமது அயல் நாடான பாகிஸ்தானுடன் நல்லுறவு தொடரும் என்றாலும், நமது எல்லைப் பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று இந்தியத் துணைப்பிரதமர் அத்வானி எச்சரிக்கை செய்துள்ளார்.

நேற்று கன்னியாகுமரியில் ரத யாத்திரிகை தொடங்குவதற்கு முன்னர் அத்வானி மக்களிடையே பேசும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; வாஜ்பாய் அரசினால் தான் பாகிஸ்தானுடன்அமைதி பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது. எனவே தொடர்ந்து பாகிஸ்தானுடன் உறவு பேண வேண்டும் என்றால் அது வாஜ்பாய் அரசு மீண்டும் ஆட்சிக்கு வருவதன் மூலமே சாத்தியமாகும்.முன்னைய காங்கிரஸ் ஆட்சியில் நாடு வேலையில்லாத் திண்டாட்டம், எழுத்தறிவின்மை, தீவிரவாதம், நிலையற்ற தன்மைகளே மேலோங்கி இருந்ததாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள சவால்களைச் சமாளிக்க வாஜ்பாய் அரசு முழுமையான பலத்துடன் இருப்பதாகக்கூறிய அவர், வாஜ்பாய் அரசில் சாதனைகளில் இந்திய- பாகிஸ்தான் உறவுகளே மேன்மையானவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தானுடன் நீடித்த அமைதியுடன் இந்தியா வாழ, வாஜ்பாய் அரசு தொடர்ந்தும் பாடுபடும் என்றும் கூறியுள்ளார்

இதேவேளை பாகிஸ்தானுடனான உறவுகள் தொடரும் என்றாலும் எமது பாதுகாப்புப் படையினர் எல்லையில் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.



பாகிஸ்தானின் பெசாவர் நகரிலுள்ள சல்மான் அகதிமுகாமிலிருந்து குடும்பத்தினருடன் தாயகம் திரும்பும் ஆப்கானிஸ்தான் சிறுமி வெளியே உற்று நோக்குகின்றார்.

# பாகிஸ்தானிய இளைஞர் ஹைதராபாத்தில் கைது!

(புதுடில்லி)

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் பாகிஸ்தான் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உளவு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இராணுவத்தினரின் புகைப்படங்கள் உட்பட பல ஆவணங்கள் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

# கெயிட்டியில் புதிய பிரதமர் நியமனம் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட உறுதி

கெயிட்டியில் புதிய பிரதமர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். கெயிட்டியின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தில் 22வருடங்கள் பணியாற்றிய வருமான ஜெனாத் வட் போற்றி என்பவர் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கருத்து தெரிவிக்கையில்; மிக விரைவில் கெயிட்டி யில் சட்டமும், ஒழுங்கும் நிலை நாட்டப்படுமென வும், இதனைத் தொடர்ந்து கெயிட்டியிலிருந்து வெளியேறிய அனைவரும் மீண்டும் நாடுதிரும்பு வார்களெனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்விமான்களையும், நிபுணர்களையும் கொண்ட அமைச்சரவை ஒன்று இவ்வாரம் அமைகக்கப்படுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

# வாஜ்பாயே பிரதமராக வேண்டும்

## - ஜெயலலிதா கூறுகின்றார்

(சென்னை)

இந்தியாவில் பிறந்த ஒரு ஆற்றல் மிகுந்த அரசியல்வாதியான வாஜ்பாய்தான் பிரதமராக வேண்டுமென தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவில் பிரதமராகக் கூடாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் அ.தி.மு.க.- பா.ஜ. கட்சியின் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



சூடானின் தென்பகுதியில் உணவுக்காக குழந்தைகளுடன் காத்திருக்கும் தாய்மார். தலைநகரிலுள்ள பெண்களுக்கான சிறைச்சாலையில் இவர்கள் தடுத்து கைக்கப்பட்டுள்ளனர்.

# ஒரு வாரத்தில் தாய்வானில் தேர்தல் அமைச்சரவையில் திடீர் மாற்றம்!

## -முக்கிய அமைச்சர்கள் பதவிநீக்கம்

தாய்வானின் பிரதமர் தனது அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.

மூன்று வருடங்களில் இடம் பெறும் எட்டாவது அமைச்சரவை மாற்றம் இதுவாகும். தேர்தலுக்கு ஒரு வாரம் இருக்கும் போதுஇவ் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய மாற்றத்திற்கமைய நிதியமைச்சின் பொறுப்பு தற்போதைய பிரதி பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உரிய முறையில் இடம் பெறவில்லையெனக் கூறி பாதுகாப்பு மற்றும் உள்துறை அமைச்சர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தாய்வானில் சனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் சூடுபிடித்துள்ளது எதிர்க்கட்சித்தலைவரும் முன்னாள் உப சனாதிபத்தியுமான லியன்சான் ஆதரவினர்கள் தாய்சுங் நகரில் நேற்று முன்தினம் ஊர்வலமாக செல்கின்றனர்.


# கண்ணிவெடி அபாயமும் பாதுகாப்பும்

கண்டாவளையூர் ஆறு · சுபாஸ்கரன்

தமிழர் தாயகத்தில் கடந்த இருபது வருடங்களாக வீசிய யுத்தச் சூறாவளி ஓய்ந்திருந்தாலும் அதன் வடுக்களை இன்றும் மக்களால் மறக்கமுடியவில்லை. சமாதானக் காற்று வீசத் தொடங்கி இரு வருடங்கள் ஆனாலும் கண்ணிவெடி அபாயத்தில் இருந்து முற்றுமுழுதாக மக்களால் மீளமுடியவில்லை. இருவருடங்கள் இல்லை, இருபது வருடங்களானாலும் இலங்கையில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றி முடிக்க முடியாதென சர்வதேச நிறுவனங்கள் கூறியுள்ளன.

இலங்கையில் கண்ணிவெடிகள் தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டுமே விதைக்கப்பட்டுள்ளன. அவற்றை முற்றுமுழுதாக அகற்றி முடிக்க குறைந்தது முப்பது வருடங்களாவது செல்லும் என கணிப்பிடப்பட்டுள்ளது. இருபது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் கோரப் பிடியிலிருந்து தமிழ் மக்களால் தற்போது விடுபட முடிந்ததே ஒழிய இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் இந்தக் கண்ணிவெடிகள் அமைந்து விட்டன.

தமிழர் தாயகப் பகுதிகளில் ஏறத்தாழ ஒரு மில்லியனுக்கும் அதிகமான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இவ்வாறான கண்ணிவெடி அபாயத்தில் இருந்து நாம் அனைவரும் பாதுகாப்புப் பெற அது பற்றிய ஒரு விழிப்புணர்வை கொண்டிருக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். தமிழர் தாயகத்திலும் அதன் எல்லைக் கிராமங்களிலும் வசிக்கும் அனைத்து மக்களும் கண்ணிவெடிகள் பற்றி பூரண அறிவைப்பெற்று அவற்றிலிருந்து பாதுகாப்புப்பெறுவது தொடர்பான அறிவையும் பெற்றிருக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.



கண்ணிவெடிகளை உற்பத்தி செய்யும் நாடுகள் கண்ணிவெடி ஒன்றின் உற்பத்திக்காக மூன்று அமெரிக்க டொலர்களைச் செலவிடுகின்றன. யுத்தத்தில் ஈடுபட்ட நாடு ஒன்று புதைக்கப்பட்ட கண்ணிவெடி ஒன்றினை அகற்ற இதைவிட அதிகமான டொலர்களைச் செலவிடுகின்றது. இவ்வளவு பாரிய நிதியினைச்செலவிட்டு வறிய நாடுகளால் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. இந்நிலைக்கு இலங்கையும் முகம்கொடுக்கின்றமை தவிர்க்கமுடியாததாகும்.

கண்ணி வெடி தொடர்பான பிரச்சினைகளைக் தவிர்ப்பதற்காக மனிதாபிமான கண்ணிவெடி செயற்பாடு ஒன்று முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இதில் கண்ணிவெடிகளை அகற்றுதல் (Mineclearance),கண்ணிவெடி அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி (Mine risk Education), கண்ணிடிவெடிகளினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் (survivor assistance), கண்ணிடிவெடிகளைத் தடை செய்வதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் (Advocacy),தற்போது பாவனையில் உள்ள மற்றும் பாவனைக்குப் பயன்படுத்தக் கூடிய கண்ணிவெடிகளை இல்லாது ஒழித்தல் (Stock Pile Destruction) ஆகிய நிலைகள் பிரேரிக்கப்பட்டுள்ளன. இந்நிலைகளை நாம் அறிந்து கொள்வதன் மூலம் கண்ணிவெடி அனர்த்தங்களில் இருந்து பெருமளவு பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கண்ணிவெடிகளை அகற்றுதலானது சமூக பொருளாதாரச் செயற்பாடுகளின் தாக்கம் பற்றிய மதிப்பீடு (Socio Economicimp act assesment) தொழில்நுட்ப ரீதியான மதிப்பீடு (Technical survey),கண்ணிவெடி அகற்றுதல் (mine clearance),கண்ணிவெடி அகற்றப்பட்டதனை உறுதிசெய்தல் (quality assurance) ஆகியன நான்கு படிமுறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

சமூக பொருளாதாரச் செயற்பாடுகளின் தாக்கம் பற்றிய மதிப்பீடு என்பது கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் மிக முக்கியமான பகுதிகளை இனங்கண்டு அப்பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் கண்ணிவெடிகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகும். அதாவது மக்



கள் நெருக்கமாக வாழும் இடங்கள், முக்கிய சந்திகள், பாடசாலைகள், மதவழிபாட்டுத்தலங்கள், விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலங்கள் போன்றவற்றிலேயே முதல் கண்ணிவெடிகள் அகற்றப்படும்.

தொழில்நுட்ப ரீதியான மதிப்பீடு என்பது கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் தொழில் நுட்ப உபகரணங்களால் சமூக பொருளாதாரச் செயற்பாடுகளின் தாக்கம் பற்றிய மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள கண்ணி வெடிகளைக் கண்டறிந்து அப்பகுதியினை அபாயம் நிறைந்த பகுதியெனக் கருதி எல்லையிடப்படும் செயற்பாடாகும்.



தொழில்நுட்ப ரீதியான மதிப்பீட்டின் மூலம் கண்ணிவெடி அபாயம் நிறைந்த பிரதேசமென எல்லையிடப்பட்ட பிரதேசங்களில் கண்ணிடிவெடியகற்றும் நிபுணர்கள் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடே கண்ணிவெடியகற்றல் எனப்படும்.

இச்செயற்பாட்டில் வடக்கு-கிழக்குப் பகுதியில் 12 நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.


கண்ணிவெடி அபாயம் நிறைந்ததென எல்லையிடப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடி முற்றாக அகற்றப்பட்டதும் அதனை உறுதிசெய்து சான்றுப் பத்திரம் வழங்குதல் கண்ணிவெடி அகற்றலில் இறுதிக்கட்டமாகும். இலங்கையில் 12 நிறுவனங்கள் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தாலும் கூட சான்றுப்பத்திரம் வழங்கும் அதிகாரம்பெற்ற நிறுவனமாக இலங்கையில் கடமையாற்றுவது ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி செயற்பாட்டுத் திட்டம் (UNDP)மட்டு மேயாகும். இந்நிறுவனம் சான்றுப் பத்திரத்தை வழங்கிய பின்பே அப்பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்படுவர். இச்செயற்பாடுகளுக்கு முன் நாம் அவசரப்பட்டு இப்பிரதேசங்களுக்குச் செல்வதனாலேயே எமது அங்கங்களை இழக்க நேரிடுகிறது. எனவே நாம் பொறுமையுடன் செயற்பட்டு எமது அங்கங்களைப் பாதுகாக்க முற்படவேண்டும்.

வெடிபொருட்கள் அபாயகரமானவை என்பதையும் அவற்றினை இனங்காண்பது எப்படி? என்பதனையும், அவை பரவலாகப் புதைக்கப்பட்டுள்ள இடங்களைப் பற்றியும் அறிவூட்டுவது "கண்ணிவெடி அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி" (Mine risk Education) எனப்படும் இக்கல்வியானது இன்று தமிழர் தாயகப் பிரதேசத்தில் உள்ள அனைவருக்கும் இன்றியமையாததாகும்.

எமது பிரதேசத்தில் எதிரிகளால் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் ஏராளமானதாகும். இக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்களான பாழடைந்த வீடுகள், கைவிடப்பட்ட இராணுவ காவலரண்கள்,அழிவுற்ற பாலங்கள், சண்டை நடைபெற்ற முன்னரங்கப் பகுதிகள், இராணுவம் பயன்படுத்திய வீதியின் ஓரங் கள், பயன்தரு மரங்கள் உள்ள இடங்கள், கிணற்றிற்கு அருகாமை, தாக்குதலுக்கு உள்ளாகி கைவிடப்பட்ட வாகனங்களின் அருகாமை ஆகிய பகுதிகளுக்கு நாம் செல்லக் கூடாது. இப்பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்ப்பதன் மூலம் வீணான அங்க இழப்புக்களையும், உயிரிழப்புக்களையும் தவிர்த்துக்கொள்ள முடியும். எதிர்பாராத விதமாக கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்களில் நாம் சிக்கிக்கொண்டால் அவ்விடத்திலிருந்து அசையாமல் நின்று கொண்டு அபாயக் குரல் எழுப்பி அயலவர்களின் உதவியினைக்கோரி அவர்கள் மூலமாக அவ்விடத்திலிருந்து மீளவேண்டும்.

யுத்த ஆயுதங்களான கைக்குண்டுகள், வெடிக்காத நிலையிலுள்ள எறிகணைகள், சந்தேகத்திற்கிடமான பொருட்கள் என்பவற்றை நாம் தொடவோ அதனை எடுத்துச் செல்லவோ கூடாது. பெரியவர்களால் சண்டை நடைபெற்ற இடங்களில் இருந்து எடுத்துச் செல்லப்படும் இப்பொருட்களால் பெரிதும் பாதிக்கப்படுவது ஏதும் அறியாத சிறுவர்களேயாகும். பெரியவர்களால் வீட்டிற்கு எடுத்து வரப்படும் பொருட்களைச் சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்கள் என நினைத்து அவற்றை எடுத்து விளையாடுவதன் மூலமும், பரிசோதிக்க முற்படுவதன் மூலமும் பாரிய உயிழப்புக்களும், சொத்து இழப்புக்களும் ஏற்படுகின்றன. அப்பாவிச் சிறார்களின் உயிரிழப்புக்களுக்கு பெரியோர்களே காரணமாக அமையும் நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் யுத்தத்தின்போது கைவிடப்பட்ட பொருட்களை நாம் தொடுவதனையும், எடுத்துச்செல்வதனையும் தவிர்த்துக்கொள்வதன் மூலம் எமது சிறார்களைக் காப்பாற்ற முடிவதுடன் வீணான இழப்புக்களையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் (SurvivorAssistance) என்பது மனிதநேயம் உள்ள ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய தார்மீகக்கடமையாகும். கண்ணிவெடி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோரில் 30-40 வீதமானவர்கள் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் என மிதிவெடிகளைத் தடைசெய்யும் சர்வதேச அமைப்பு (International to campaign ban landmines) தகவல் வெளியிட்டுள்ளது



வாகன கண்ணிவெடிகள்

இவ்வாறான சிறுவர்களுக்கும் அங்கவீனர்களாகிய ஏனைய சிறுவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்க வேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும்.

# கொழும்புத்துறை பகுதி கிணற்றிலிருந்து பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

## புதிதாகப் போடப்பட்டிருப்பதாகத் தகவல்

கொழும்புத் துறைப்பகுதியில் உள்ள தனியார் வீடொன்றின் கிணற்றினுள் இருந்து 250றகு அதிகமான வெடிபொருட்கள் மீட்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இவ் வெடிக்காத வெடிபொருட்களும் வெடிக்காத நிலையில் உள்ள எறிகணைகள், மற்றும் கைக்குண்டுகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள தனியார் வீடொன்றின் கிணற்றை இறைத்து துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே கிணற்றினுள் இவ் வெடிபொருட்கள் காணப்பட்டதாகவும் இது பற்றி படையினரின் வெடிபொருட்கள் அகற்றும் பிரிவினருக்கு அறிவித்தும் அவர்கள் வந்து அவற்றை மீட்டுச் செல்லாததனால் ஹெலோட்ரெஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவினருக்கு இத்தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் வந்து அவற்றை மீட்டெடுத்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்கள் யாவும் புதியவை என "ஹெலோட்ரெஸ்" வெடிபொருட்கள் அகற்றும் குழுவினர் தெரிவித்துள்ளனர். (33)

# 50 வருட வரலாற்றில் அதிகூடிய வரட்சி நிலை!

சிறிலங்காவில் கடந்த 50 வருட காலத்தில் முதன் முறையாக பாரிய வரட்சி நிலை தற்சமயம் நிலவுகிறது .

இதன் காரணமாக இந்த மாத இறுதிப் பகுதியில் நீர் மின்சார உற்பத்தியில் தாக்கம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. இதனால் மின் பிறப்பாக்கிகளை பயன்படுத்தி மின்சார உற்பத் தியை மேற்கொள்ள உள்ளபோதும் அதற்காக ஏற்படும் மேலதிக செலவான அலகு ஒன்றுக்கு 3ரூபா கட்டணத்தை சிறிலங்கா மின்சார சபையே செலுத்தும் என அந்தச் சபை அறிவித்துள்ளது.

# மெய்வல்லுநர் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளி. கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி இமாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.இளங்கோ, கம்பன்,வள்ளுவன் இல்லங்கள் இதில் பங்கேற்கின்றன. (சோ)

# படையினரால் கைதானோர் விபரம் தராவிடில் யாழ். இல் அரச நிர்வாகத்தை முடக்குவோம்

## -சிறிலங்கா சனாதிபதிக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முன், படையினரால் கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களை தர வேண்டும். தவறும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் அரச இயந்திரத்தை முடங்கச் செய்வோம். இவ்வாறு சிறிலங்கா சனாதிபதிக்கு மகஜர் மூலம் நிர்ப்பந்தம் விடுக்கப்பட்டுள்ளது.**

வடபகுதியில் படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து யாழ்ப்பாணம் அரச அதிபர் ஊடாக சனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

எட்டுவருடங்களுக்கு முன்னர் அரச படைகளால் கைது செய்யப்பட்டவர்களுக்கு இது வரை என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாத நிலையில் எமது சங்கங்களின் உறுப்பினர்கள் குழப்பமடைந்தநிலையில்உள்ளார்கள். 75க்கு மேற்பட்ட பெண்கள் தமது கணவன் மார்களின் நிலை அறியாது உள்ளனர். இத்தகைய பெண்களின் எதிர்காலம் மிகவும் பரிதாபகரமானது.

இத்தகைய நிலையில் தாங்களும், தங்கள் கணவனை இழந்து இருப்பதால் இந்தப் பெண்களின் மனோநிலையை உணர்ந்து கொள்வீர்கள். எனவே இது விடயத்தில் தாங்கள் உடனடிக் கவனம் செலுத்தி எமக்கு உண்மை நிலையைத்தெளிவு படுத்துங்கள்.

நாம் கடந்த காலங்களில் பல தரப்பட்ட போராட்டங்களை நடத்தியிருந்த போதிலும் கூட அவை மூலம் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை என்றும் அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## சிகிச்சை பெற்றுவந்த நோயாளி மரணம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த எம்.சிவனடியான் (வயது 69) கர்ணன் குடியிருப்பு கோம்பாவில் புதுக்குடியிருப்பு என்பவர் திங்கட்கிழமை இறந்துள்ளார். எனகிளி. மாவட்ட வைத்திய அதிகாரி அறியத்தந்துள்ளார்.

## சர்வதேச பெண்கள் தினத்தில் அதிர்ஷ்டசாலிகள் தெரிவு



சர்வதேச பெண்கள் தினத்தினைமுன்னிட்டு அன்றைய தினம் கிளிநொச்சி மக்கள் வங்கியில் மகளிர் பொற்ற சேமிப்புக் கணக்கு வைத்துள்ளவர்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு இடம் பெற்றது.

கிளி. மக்கள் வங்கி முகாமையாளர் தலைமையில் பிற்பகல்3.00 மணிக்கு மேற்படி வங்கியில் நடைபெற்ற இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கரைச்சிப் பிரதேசச் செயலர் பொன் நித்தியானந்தம் , சிறப்பு விருந்தினர்களான கிளி. புனித திரேசாமகளிர் கல்லூரி முதல்வர் திருமதி அரியரத்தினம், கிளி.வர்த்தக சங்கச் செயலர் நவரட்ணராசா ஆகியோர் அதிர்ஷ்ட சாலிகளுக்கான பெயர்களைத் தெரிவுசெய்தனர்.

அதிர்ஷ்டசாலிகளாக கிளி.மாவட்ட செயலக ஊழியர் திருமதி சா.மதியழகி, பு.மேரிதிரேசாரத்தினம் மணியங்குளம் ஸ்கந்தபுரம், ஜெ.சுகந்தினி சிவநகர் உருத்திரபுரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்றதுடன் இவர்களுக்கு வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த தொகையின் இரு மடங்கு வங்கி கணக்கில் வைப்பில் இடப்பெற்றது. வனிதையர் அதிர்ஷ்டக் கணக்கு (வனிதாவாசனா) மூலம் கிளி. மக்கள் வங்கி கிளையில் மூவர் அதிர்ஷ்ட சாலிகளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## 25சதவீதமான மாணவர்கள் உடற் பருமன் உள்ளவர்கள்!

(கொழும்பு)

இலங்கையில் 25 சதவீத மாணவர்கள் உடற்பருமன் மிக்கவர்களாக உள்ளார்கள். நாவுக்கு ருசியான உணவு வகைகளை அதிகம் விரும்பி உண்பதே இதற்குக் காரணம். இதனை சுகாதாரக் கல்வியாளர் வைத்தீஸ்வரன் கொழும்பில் கருத்தரங்கில் கூறியுள்ளார்.

சில பெற்றோர்கள் மாணவர்களின் கை செலவுக்கு அதிக தொகை பணம் கொடுப்பதால், விரும்பிய உணவுகளை மாணவர்கள் உண்பதனாலும், பகலில் நித்திரை செய்வதாலுமே உடல் பருமன் மாணவர்கள் மத்தியில் 25 சதவீதமாக வுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## தாக்குதலில் மூவர் காயம்!

காவத்தை, ஏர் னை, சமரகந்தை தோட்டத்தை சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்கள் பெரும்பான்மை இனத்தவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கும் கத்தி வெட்டிற்கும் இலக்காகி இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். இவர்கள் மூன்று பேரும் பாதையில் நின்று கதைத்துக் கொண்டிருந்த போதே தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்கள்.

## 4 பொலிஸ் அதிகாரிகள் மீது ஐ.ம.சு. முன்னணி குற்றச்சாட்டு

பத்தேகம, நெலுவ, நாகொட, ஹினிதும இந்த நான்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி ஆரியரத்தின கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் இவர்கள் அனைவரும் 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மாற்றலாகி வந்தவர்கள் என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொற்பதிப் பகுதியில் காவலரண்கள் மீண்டும் படையினரால் புனரமைப்பு

வடமராட்சி பொற்பதிப்பகுதியில் படையினரால் கைவிடப்பட்டிருந்த காவலரண்களைப் படையினர் புனரமைத்து வருகின்றனர். கடந்த சிலமாதங்களாக கைவிடப்பட்டிருந்த இக் காவலரண்களைப் படையினர் கடற்கரை யோரமாக நிறுவியிருந்தனர். அப்பகுதிக்கு தொழிலுக்குச் செல்லும்மக்கள் மீதான கெடுபிடிகள் குறைவடைந்திருந்தன.

மீண்டும் இவை புனரமைக்கப்பட்டு வருவதையடுத்து பாஸ் சோதனைக்கெடுபிடிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. (33)

## பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு கடனுதவி

உலக மகளிர் தினத்தன்று கண்டாவளைப் பிரதேசத்தில் தேர்ந்தெடுக் கப்பட்ட பெண்களை தலைவராக கொண்ட இளங்குடும்பப் பெண் களுக்கு அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் உதவிகள் வழங்கப்பட்டன. 13 குடும்பங்களுக்கு உலகஉணவுஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகத்தால் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சி.சிவசொருபநாதபிள்ளை தலைமையில் நடைபெற்ற கடன் வழங்கும் நிகழ்வில் சிறு கைத்தொழில் முயற்சியில் ஈடுபடுவோர்க்கு தலா இருபத்தையாயிரம் ரூபாவும் ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்கு தலா பதினையாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (14)



கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக கட்டட நிர்மாணப் பணிகளில் (மேசன்) இளம் பெண்கள் ஈடுபட்டுள்ளதனை படத்தில் காணலாம். (படம் சோதி)

## தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை பின்பற்ற அரச ஊடகங்கள் தவறிவிட்டன

### -விசாரணை செய்ய அதிகாரி நியமனம்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை அரச ஊடகங்கள் பின்பற்றத் தவறியுள்ளதாக எழும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதற்காக தேர்தல் ஆணையாளர் விசாரணை அதிகாரியொருவரை நியமித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின்செயலாளர்கள் தேர்தல் ஆணையாளரை வெள்ளிக்கிழமை சந்தித்தபோது, அரச ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பாக செயற்படுவதாக முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்தே தேர்தல் ஆணையாளர்.இதுகுறித்து விசாரணைசெய்ய அதிகாரி ஒருவரை நியமனம் செய்துள்ளார்.

அத்துடன் இது குறித்து விளக்கமளிக்கும் முகமாக ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லேக் ஹவுஸ் வெளியீட்டு நிறுவனம் ஆகியவற்றிற்கு அழைப்பாணை அனுப்பும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்த விசாரணை அதிகாரி கூறியுள்ளார்.

## புதிய தலைவர்கள் நியமனம்

சனாதிபதியின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட அபிவிருத்தி லொத்தர்சபையின் பணிப்பாளர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகியவற்றிற்குப் புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளர் டபிள்யூ.பி. எஸ். ஜயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹரீம் பீரிஸ், ரஞ்சித் தேனுவர மற்றும் ஏ.ஏ.விக்கிரமசிங்க ஆகியோர் இதன் பணிப்பாளர் சபையின் இதர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஹரீம் பீரிஸ் ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் தலைவராக இருப்பதோடு அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளருமாவார்.

ரஞ்சித் தேனுவர மஹாபொல பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளராவதோடு, ஏ.ஏ.விக்கிரமசிங்க சனாதிபதி புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருமாவார்.

தேசிய லொத்தர் சபையின் தலைவராக மலேஷியாவின் முன்னாள் உயர்ஸ்தானிகரும் திறைசேரியனின் முன்னாள் பிரதிச் செயலாளருமான தயாலியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

## வாக்குச் சீட்டுக்கள் ஒப்படைப்பு

பொதுத்தேர்தல் வாக்குச் சீட்டுகள் 14மாவட்டங்களுக்காக இதுவரை அச்சிடப்பட் டுள்ளன. இவற்றில் 9 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இம்முறை தேர்தலுக்காக14.5மில்லியன் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட உள்ளன. இவற்றுக்கான மொத்த செலவு 50 மில்லியன் ரூபாவாகும். (32)

## அரச சேவைகளின் சம்பள முரண்பாட்டை சனாதிபதி நிரந்தரமாக தீர்த்துவைக்க வேண்டும்

### -தொழிற்சங்க சம்மேளனம் வேண்டுகோள்

(கொழும்பு)

அரச சேவைகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக, விரிவான அதிகாரங்களைக் கொண்ட ஆணைக்குழுவை அமைத்து சம்பள முரண்பாட்டை நிரந்தரமாக தீர்த்துவைக்க சனாதிபதி முனையவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் லால் காந்த சனாதிபதிக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அன்றாடம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதற்கு மத்தியில் தொழிலாளர் வர்க்கம் பெரும் சிரமத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் அடிக்கடி போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும், இதுவரை காலமும்சம்பளப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

இதேவேளை சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க இதுவரையில் அமைக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் ஒழுங்கான முறையில் இதுவரை எந்தவொரு தீர்வையும் மேற்கொள்ள வில்லை .

இதனால் அரச சேவையில் பேரம் பேசும் தகுதியை அடிப்படையாக வைத்து பல்வேறுபட்ட அரச துறைகளில் சம்பளங்களை அதிகரித்துக் கொண்டதன் மூலம் மேலும் மேலும் பெரும் சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் அரச சேவையில் மேலும் பல புதிய சம்பள முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன.

எனவே சனாதிபதி தலையிட்டு இதற்கு ஆணைக் குழு ஒன்றை விரிவான முறையில் அமைக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# போதுமான மனிதவளம் உள்ளபோதிலும் தெற்காசியாவின் தேவைகள் நிறைவேறவில்லை

## சார்க் கூட்டத்தில் அபிப்பிராயம்

**தெற்காசியாவில் போதுமானளவிற்கு மனிதவளம் இருக்கின்ற போதிலும், அது தேவைகளை நிறைவு செய்வதற்குத் தகுதியானதாக இல்லை. இவ்வாறு மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில், இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே சார்க் நாடுகள் ஒன்றிணைந்து மனிதவள அபிவிருத்திக் குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

உலக சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு சனத்தொகை தெற்காசியாவிலேயே உள்ளது. இதன் காரணமாக இங்கு போதுமானளவு மனிதவளம் காணப்படுகின்றது.

ஆனால் இப்பகுதிகளில் பல மில்லியன் கணக்கானோர்கள் வறுமை காரணமாக போதுமான அளவு உணவு, கல்வி மற்றும் அடிப்படை மனிதத் தேவைகளான குடியிருப்பு, சுகாதாரம் என்பன கிடைக்காது தவிக்கின்றார்கள்.

இதன் காரணமாக இப்பகுதிகளில் அரசியல் சமூக,பொருளாதார பதற்றநிலை நிலவுகின்றது. எனவே அமைக்கப்பட்டுள்ள மனிதவள அபிவிருத்தி தொழில்நுட்பக் குழு தெற்காசியாவில் மனிதவள அபிவிருத்தியில் பெரும் பங்களிப்புச் செலுத்த முடியும்.

உலக மயமாக்கலின் பயனாக, தொழிற்கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி என்பவற்றிற்கான தேவை அதிகரித்துள்ளது.

தற்போது எமது நாடுகளைச் சேர்ந்தவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் கீழ்மட்ட தொழில்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதன்காரணமாக தரமான தொழிலாளர்களை உருவாக்க வேண்டிய தேவை எமது நாட்டிற்கு உண்டு.இவ்வாறு சார்க் நாடுகளின் மனிதவள அபிவிருத் திக் குழுவின் முதலாவது கூட்டத் தொடர் கொழும்பில் இரண்டு நாட்கள் நடந்தபோதே, கல்வி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

# பாசையூர் மீனவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடி

யாழ். பாசையூர்ப் பகுதி மீனவர்கள் மீது கடற்படையினர் தம் கெடுபிடி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேற்படி பகுதி மீனவர்களுக்கு நீண்டகாலமாக விதிக்கப் பட்டிருந்து வந்த பாஸ் நடைமுறை அனுமதிப்பத்திர நடைமுறைகள் மற்றும் சோதனைக் கெடுபிடிகள் என்பன அரசு- புலிகளுக்கிடையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்துசற்றுத் தளர்த்தப்பட்டிருந்தது.

எனினும் தற்பொழுது மீண்டும் இக்கெடுபிடி நெருக்கடிகள் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் கடற் கண்காணிப்பு மற்றும் கரை யோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் படையினர் ஆரம்பித்திருப்பதால் மீனவரிடத்தே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (33)

# நீதிமன்றத்தின் முன்னால் சூதாடிய குழுவினர் கைது!

கந்தளாய் நீதிமன்றத்தின் முன்னால் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த கும்பலொன்றை பொலிசார் கைது செய்துள்ளனர்.இந்தக் கும்பலிடமிருந்து பணமும் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வீட்டில் எட்டுப்பேர் கொண்ட குழுவில் நான்கு பேர் பெண்களாவர்.சூதாட்டக்களத்தில் 1500 ரூபாவும் கஞ்சா பக்கற்றுகளும் வைத்து இவர்கள் சூதாடினர். நீதிமன்றம் முன்பாக நீதி மன்றத்தை அவமதிக்கும் வகை யில் நடந்து கொண்டதாகக் கூறி இவர்கள் கைதுசெய்து செய்யப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை நடந்துள்ளது.

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முள்ளியவளைப்பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேற்படி பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளால் பொதுச்சந்தை வியாபாரிகள் உணவுச்சாலை உரிமையாளர்கள் பெரும் அவலப்பட்டு வருகின்றனர்.

தமிழீழ சுகாதார சேவையினர் தமது சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கையினை தீவிரமாக நடைமுறைப்படுத்தி வரும் இவ்வேளையில் மேற்படி பகுதிகளில் கட்டாக்காலியாக சொறி, குட்டை, புண் ஆகிய கோலங்களிலும் சந்தைப்பகுதிகளில் குட்டி நாய்கள் சந்தைக்குச் செல்லும் மக்களின் கால்களில் இடறுப்பட்டும், சிரமத்தையும், தொல்லையையும் ஏற்படுத்தி வருவதோடு உணவுச்சாலை மற்றும் சந்தை, வியாபாரிகள் சுகாதார விழிப்புணர்வு செயற்பாட்டை தீவிரமாக கடைப்பிடிக்க பெரும் அவலப்படுவதாக தெரிவிக்கின்றனர். (ஆ)

# பொதுத் தேர்தலில் போட்டியிடும் முடிவால் பிக்குகளிடையே முரண்பாடு தொடர்கின்றது

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் பௌத்த பிக்குகளுக்கும் ஏனைய பௌத்த பிக்குகளுக்கும் இடையே தொடர்ந்தும் கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கொழும்பில் இரண்டு தரப்பிலும் ஊடக மகாநாடுகள் கடந்த திங்களன்று நடத்தப்பட்டன.

தேர்தலில் போட்டியிடும் ஹெல உறுமயவின் சார்பில் நடத்தப்பட்ட ஊடக மாநாட்டில் உரையாற்றிய தம்மலோக்க தேரர் தமக்கு எதிராக பல ஊடகங்கள் தேவையற்ற பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தினார். இந்த ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். தாம் ஒருபோதும் கட்சியின் பெயரால் தேர்தலில் போட்டியிடவில்லை எனவும் பௌத்த மதத்தை காப்பாற்றுவதற்காகவே களத்தில் இறங்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஹெல உறுமயவுக்கு எதிரான போக்கை வெளிப்படுத்தும் ஊடக மகாநாட்டில் உரையாற்றிய தம்மவன்ச தேரர், பௌத்த குருமார் கட்சிகளில் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது தவறல்ல. எனினும் தேர்தலுக்காக பௌத்த கொடியையும் பௌத்த சின்னத்தையும் பயன் படுத்தும் ஹெல உறுமயவின் செயற்பாடு கண்டிக்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

# தண்டவாளத்தில் நடந்தவர் ரயில் மோதிப் பலி!

பம்பலப்பிட்டியில் ரயில் தண்டவாளத்தில் நடந்துகொண்டிருந்த ஒருவர் மீது, வேகமாக வந்த ரயில் மோதியதில், அந்தநபர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15க்கு நடந்துள்ளது. பலியான நபர் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சரவணசாமி (வயது 34)என பொலிசாரால் இனம் காணப்பட்டுள்ளது.

# வீதியில் மதகு உடைவால் போக்குவரத்து பாதிப்பு

முள்ளியவளை செங்குந்தா பிரதான வீதியில் உள்ள மதகு உடைவு ஏற்பட்டுள்ளதால் அவ் வீதியில் பயணிப்போர் அவலப்பட்டு வருகின்றனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மேற்படி வீதி மதகானது, மதகின் இருபக்கம் பாதுகாப்புக் கட்டுக்கள் உடைந்து மதகின் ஒரு பக்கம் சுமார் 3அடி நீளத்தில் மேற்பகுதி உடைந்த நிலையிலும் நடுப் பகுதியில் பாரிய ஓட்டையாகவும் உள்ளது நடுவில் உள்ள பாரிய ஓட்டைக்கு தகரம் போடப்பட்ட போதும் பாடசாலைக்குச் செல்லும் மாண வர்கள் அக்கிடங்கில் விழுந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி மதகானது 3வீதிகள் இணையும் முசந்தியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# படையினர் அழித்த தென்னை வளத்திற்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும்

## வடமாகாண தெங்குச்செய்கையாளர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தில் யாழ்குடா நாட்டில் படையினரால் அழிக்கப்பட்ட தென்னை வளங்களுக்குரிய நட்ட ஈடுகள் வழங்கப்பட வேண்டும் என்றுவடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவிற்கும் வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத் தலைவர் அ.நல்லதம்பி தலைமையிலான குழுவினர்களுக்குமிடையே விஷேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது கடந்த காலத்தில் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் லட்சக்கணக்கான தென்னைமரங்கள் அழித்தொழிக்கப்பட்டதுடன் இன்னமும் பாதுகாப்பு வலயம் என்றபெயரில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள தென்னைமரங்கள் படையினரின் பல்வேறு தேவைகளுக்காகவும் தறிக்கப்பட்டு வருகின்றன.

எனவே இதுவரை காலமும் படையினரின் நடவடிக்கைகளால் தமது தென்னை வளங்களை இழந்தவர்களுக்குரிய நட்டஈடு வழங்கப்படுவதுடன், படையினர் தாம் ஆக்கிரமித்து வைத்துள்ள தென்னைவளமிகு பகுதிகளையும் மக்களிடம் ஒப்படைக்கவேண்டும் என தெங்கு செய்கையாளர் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

இதனை முற்றாக நிராகரித்த படைத் தரப்பு இது தமது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பாதகமான விளைவை உருவாக்கும் என கூறி முற்றாக நிராகரித்துள்ளனர். (33)


# பதவிவெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர் வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி." எனும் முகவரிக்கு 25.03.2004ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். சங்கத் தொழிற் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

01.லிகிதர் :- 165/88-14 31/99ன் படி

சம்பளம் :- 5000.00-70.00X10 -75.00X10 / 60000.00-840.00X10-900.00X10 = 77400/=

கல்வித்தகைமை:-1. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2, வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இருபாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுட்பட மொத்தம் மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்றிருப்பின் க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/வர்த்தகஎண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

02.கிளைமுகாமையாளர் :-165/88-13 31/99ன் படி

சம்பளம் :- 5250.00-75.00/10-80.00/10 / 63000.00-900.00/10-960/10 =81600.00

கல்வித்தகைமை:-1. க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2, வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் திறமைச்சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறைமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த.உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

03.வாகனச் சாரதி:- 165/88-14 31/99ன் படி

சம்பளம் :- 5000.00-70.00/10-75.00/10 / 60000.00-840.00/10-900.00/10 = 77400/=

தகைமை:- 5ஆம் ஆண்டு கல்வித்தகைமையுடன் பஸ்/லொறி/உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்தத்தக்க சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 2வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

(7170)

வ.வ.ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி.



சிந்தனைக்கு

சமூக நீதியும் சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே, எமது அரசியல் இலட்சியமாகும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11 -03-2004

## உள்வீட்டுவிவகாரம்

கருணா தொடர்பான பிரச்சினையை சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவ்வாறு கையாளப் போகின்றார்கள் என்பது இன்றுள்ள முக்கிய கேள்வியாகும். ஏனெனில் இவர்களின் அணுகுமுறையானது இலங்கையின் எதிர்காலத்தையே தீர்மானிக்கவல்லது எனில் மிகையாகாது.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தும், புலிகள் அமைப்பில் வகித்த அனைத்துப்பொறுப்பிலிருந்தும் நீக்கப்பட்டு விட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது. இந்நிலையில் சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட எந்தவிதமான தொடர்புகளையும் கருணாவுடன் கொள்வது ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

இதன்மூலம் புரிந்துணர்வு உடன்பாடும், அதன் பின்னர் வெளிநாடுகளில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள், அவற்றின் அடிப்படையில் இலங்கையில் நடந்த சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் என்பன தொடர்பான எவையுமே இனிக் கருணாவுடன் மேற்கொள்ளப்படுதல் என்பது விடுதலைப் புலிகள் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடைப்பட்டதான பேச்சுவார்த்தைகளுக்கு உட்பட்டதாக இருக்க மாட்டாது.

சிறிலங்கா அரசைப் பொறுத்து இரு அதிகார மையங்கள் உண்டு என்பதும் அதுவே இலங்கை அரசியலில் இன்று நெருக்கடிக்கு உள்ளாகியமைக்குக் காரணம் என்பதும் அனைவருக்கும் தெரியும். அத்தோடு, இவ்விரு அதிகார மையங்கள் விடுதலைப் புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் ஒன்றிற்கொன்று வேறுபட்ட நிலைபபாட்டைக் கொண்டுள்ளமையும் சகலராலும் உணரப்பட்டதொன்றே.

இந்நிலையில் இவ்விரு அதிகார மையங்களும் கருணா விடயத்தை எவ்வாறு கையாளப் போகின்றன என்பது முக்கியமானதும், எதிர்கால அரசியலைத் தீர்மானிப்பதாகவும் இருக்கும். ஆனால், இதுவரையில் கருணா தொடர்பான விடயத்தில் இவ்விரு அதிகார மையங்களும் வெளிப்படையாகக் கருத்தெதனையும் கூறவில்லை. இது விடுதலைப் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை என்றே கூறியுள்ளனர்.

ஆனால், இவ்விடயம் அவ்விரு தரப்பினராலும் ஒரேமாதிரியாகக் கையாளப்படும் எனக் கூறுவதற்கு இல்லை. அவ்வாறு உள்வீட்டுப் பிரச்சினை எனக் கூறி இருதரப்பும் இவ்விடயத்தில் நடுநிலைமையாளர்களாக நிதானப்போக்குடையவர்களாக நடந்துகொள்வார்களேயானால் அது மிக்வும் அரசியலில் பக்குவப்பட்ட செயலாக இருக்கும்.

புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை எனக் கூறிக்கொண்டாலும் ஏற்கனவே சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள அரச ஊடகங்கள் வெளியிடும் தகவல்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரானவையாகும், வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பவையாகவுமே உள்ளது. அத்தோடு விடுதலைப் புலிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துபவையாகவும் கருணா முதன்மைப் படுத்துபவையாகவும் உள்ளன.

இவற்றைத்தவிர கருணாவின் சில நடவடிக்கைக்கு சிறிலங்கா இராணுவத்தின் மறைமுகமான ஒத்துழைப்பும் கிடைக்கப்பெறுவதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கருணாவின் பிடியிலுள்ள போராளிகள் அங்கிருந்து வெளியேறுவதற்கு இராணுவம் இடையூறுகளைச் செய்வதாகவும் பிரதான வீதிகளில் கருணாவின் அடியாட்கள் வாகனங்கள் மீது மேற்கொள்ளும் சோதனைகளை இராணுவம் கண்டும் காணாமலும் இருப்பதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சும் ஊடகத்துறையும் சனாதிபதி சந்திரிகாவின் கைகளில் இருப்பதனால் கருணா தொடர்பான நிலைப்பாட்டில் இராணுவத் தரப்பும் அரச ஊடகங்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சனாதிபதியின் அணுகுமுறையின் பாற்பட்டதாகவே கொள்ளவேண்டியதாக இருக்கும். அதாவது கருணாவிற்கு உதவும் வகையிலும் தமிழ் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் வகையிலும் சனாதிபதி தரப்பு நடந்து கொள்ள முற்படுகின்றதோ எனச் சந்தேகிக்க வைப்பதாகவுள்ளது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தரப்பு அவ்வாறு நடந்துகொண்டால், நிச்சயமாக விடுதலைப் புலிகளின் உள்விவகாரங்களில் அவர் தலையீடு செய்ய முற்படுகின்றார் என்பதும் அதன் மூலம் இலங்கை அரசியலில் புதிய நெருக்கடிகளுக்கு அவர் வித்திடுகின்றார் என்றே அர்த்தம் கொள்ள முடியும். அதாவது, ஏற்கனவே சிக்கலாக்கியுள்ள இனப்பிரச்சினைத்தீர்வை அவர் மேலும் சிக்கலாக்க முற்படுகின்றார் என்ற முடிவிற்கே வரவேண்டியிருக்கும்.

ஆகையினால் கருணா தொடர்பான விடயத்தில் சிறிலங்கா அதிகார மையத்தின் தலையீடுகள் செய்வதைத தவிர்த்துக் கொள்ளுதல் விரும்பத்தக் கதாகும். அவ்வாறு இல்லாது கருணாவைத் தமிழ் இனவிரோத சக்தியாகப் பயன்படுத்தி, அரசியல் ஆதாயம் தேட சிறிலங்கா ஆட்சியாளர்கள் யாராவது முற்படுவார் களேயானால் அவர்கள் இலங்கையின் அமைதி முயற்சிக்கு விரோதமாகச் செயற்படுபவர்களாகவே இருக்க முடியும்.

# சமாதானத்தை முன்னோக்கி நகர்த்துவது மக்களின் கைகளிலே தங்கியுள்ளது

## –பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தேவையின் நிமித்தமே பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் பயணம் சனாதிபதியினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் நெருக்கடியினால் தடைப்பட்டுள்ளது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலதனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்ட மொன்றிலேயே பிரதமர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

மக்களோ அல்லது எந்தத் தரப்பினரோ பாராளுமன்றத்தைக் கலைக்குமாறும் தேர்தலை நடத்துமாறும் கோரிக்கை விடுக்கவில்லை.

பயணிக்க வேண்டியபாதை எமக்குத் தெரியும் இதற்கு இப்போது தடங்கல் ஏற்பட்டுள்ளது. சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்து அந்த நெருக்கடியின் பின்னர் யாரிடமும் கூறாமல் ஜே.வி.பி.யின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்றத்தை பெப்ரவரி 7ஆம் திகதி கலைத்தார்.

பாராளுமன்றத்தை கலைக்குமாறு நாங்கள் கூறவில்லை. யாருமே இது பற்றிக் கோரிக்கை விடுக்கவில்லை, பொதுசன ஐக்கிய முன்னணி அதிகாரம் வகித்த மாகாண சபையேனும் இந்தக் கோரிக்கையை விடுவிக்கவில்லை. இது ரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டது.

மீண்டும் அரசாங்கத்தை அமைத்து சமாதானத்தை ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பிப்பதே எமது பிரதான நோக்கமாகும். இம் முறை பொதுத்தேர்தலில் மக்களினால் எடுக்கப்படும் முடிவிற்கு அமையவே எதிர்காலம் அமையும என்று பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போர்நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திஉலகறிய சமாதானத்தை உருவாக்கி அரசியல் தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தோம். சமாதானப் பயணத்தில் நெடுந்தூரம் பயணித்து விட்டோம், மீண்டும் பின் நோக்கி நகர வேண்டுமா? மீண்டும் வெள்ளைக் கொடிகள் பறக்க வேண்டுமா? பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமா? மீண்டும் பொருளாதாரம் வீழ்ச்சியடைய வேண்டுமா? எவருக்கும் அதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், ஐக்கியதேசியக் கட்சியினால் மட்டுமே முன்னோக்கிச் செல்ல முடியும் இந்தக் கூட்டமைப்பு பின்னோக்கிச் செல்லும், குழப்பங்களை ஏற்படுத்தும், சமாதானம் ஏற்படாது அதனால் ஐக்கிய தேசியக் கட்சியை நம்புங்கள் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

# தேர்தலின் நோக்கத்தை புரியாதவர்களே தண்டனைக்கு அதிகம் உள்ளாகின்றனர்!

## -கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிலையம் கருத்து

தேர்தல் எதற்காக நடத்தப்படுகின்றது என்பதை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களே இறுதியில் பொலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும், சிறைகளிலும வாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறு தேர்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு தேசிய நிலையத்தின் தலைவர் கூறியுள்ளார்.

தேர்தல் ஒருவரது அடிப்படை உரிமையாகும். அதனை சுதந்திரமாகவும் நேர்மையுடனும் சந்திக்க வேண்டும்.

அதற்கு வன்முறைகளற்ற அமைதியான தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். என்று தேர்தல் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு தேசிய நிலையத்தின் தலைவர் அமராநந்த வீரசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த பல வருடங்களாக எமது நாட்டில் வன்முறைக் கலாச்சாரத்துடன் கூடிய தேர்தல்களே இடம் பெற்றுள்ளன. இதனால் நாம் அழிவுகளையும்அதிக இழப்புக்களையும சந்திக்க நேரிட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் அரசியல் வாதிகளும், செல்வந்தர்களும் தம்மைப் பாது காத்துக் கொள்கிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

# ஊழல்களுக்கு எதிரான ஐ.நா. உடன்பாட்டில் அரசியல் கட்சிகளைக் கைச்சாத்திட வலியுறுத்து

(கொழும்பு)

ஊழல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தில் சிறிலங்காவின் அரசியல் கட்சிகளும் கைச்சாத்திட வேண்டுமென ரான்ஸ்பரக்சி இன்ரநசனல் நிறுவனம் கூறியுள்ளது.

இந்த நிறுவனத்தின் சிறிலங்காவிற்கான நிறைவேற்று அதிகாரி கேசிவெலிமுன இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்

ஊழல்களை ஒழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பநதத்தில் உலகின் சுமார் நூற்றிப் பத்து நாடுகள் இது வரை கைச்சாத திட்டுள்ளன.

எனினும் சிறிலங்காவின் சனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரிடம் இந்த விடயத்தை தெரிவித்த போதும் இதுதொடர்பாக இதுவரை அவர்களிடம் இருந்து எந்த விதமான பதிலும் வெளியாகவில்லை.

இந்நிலையில் பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் சிறிலங்காவில் அரசியல் கட்சிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமென கேசிவெலிமுன கோரியுள்ளார்.

# 15 வருட இடைவெளியின் பின் நேற்று இந்தியக் கிரிக்கெட் அணி பாகிஸ்தான் பயணம்

15 வருட இடைவெளிக்குப் பின்னர் இந்தியக் கிரிக்கெட் அணி நேற்று பிரதமர் வாஜ்பாயின்வாழ்த்துடன் பாகிஸ்தான் சென்றுள்ளது. தனி விமானத்தில் சென்ற இந்தியக் கிரிக்கெட் அணிக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை போட்டிகள் நடைபெறவுள்ள நகரங்களில் அதியுயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரு அணிகளுக்கிடையிலான முதல் ஒரு நாள்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கராச்சியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை 5 ஒருநாள் போட்டிகள், 3 டெஸ்ட்டுகள் விளையாடவுள்ள இந்திய அணியை தோற்கடிக்கும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்கள் இதுவரை இல்லாத அளவுக்கு கடும்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பல்வேறு தடைகளுக்குப் பின்னர் அமையும் வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்தத் தொடரை மிகவும் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான கிரிக்கெட் அணித் தலைவர் கூறியுள்ளார்.




பாகிஸ்தான் சென்ற இந்திய அணியினர்.

## தென்னாபிரிக்கா ஒப்புதல்

அடுத்தவருடம் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சுப்பர் தொடர் கிரிக்கெட் போட்டிகளை நடத்த தென்னாபிரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் சம்பியனாகத் திகழ்ந்து வரும் அவுஸ்திரேலியா அணியுடன் இந்தத் தொடரில் உலகத் தெரிவு அணி மூன்று ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டி என்பவற்றில் விளையாடவுள்ளது. இருப்பினும் போட்டித் திகதிகள் மற்றும் போட்டி விபரங்கள் பற்றி முடிவு இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

# பயணிகள் பேருந்து-பிக்கப் வாகனம் நேருக்கு நேர் மோதியதில் 7பேருக்குக் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

பயணிகள் பேருந்தும் திணைக்களப் பிக்கப் வண்டியும் நேருக்குநேர் மோதிக் கொண்டதில் பிக்கப் வண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் அதில் பயணித்த அனைவரும் காயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.00மணியளவில் பரந்தன் உமையாள்புரம் ஏ-9 வீதியில இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், பரந்தன் பகுதியூடாக முகமாலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பயணிகள் பேருந்து உமையாள்புரப் பகுதி ஏ-9 வீதியிலுள்ள பாலமொன்றினை வேகமாகக் கடக்க எத்தணிக்கையில் முகமாலைப் பகுதியில் இருந்து பரந்தன் பகுதியை நோக்கிப் பயணிப்பதற்காக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பிக்கப் வண்டியுடன் மோதியதில் பிக்கப்வண்டி அருகில உள்ள பள்ளத்துக்குள் வீசப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட பேருந்து வண்டி மீண்டும் பிக்கப் வண்டிக்குப் பின்னால் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பேருந்துடனும் மோதியதாகவும் இதன் காரணமாக இரு பேருந்துகளும் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இவ்விபத்துத் தொடர்பாக தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.



மேற்படி விபத்தின்போது காயமடைந்தவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு: மகேந்திரன் (வயது52), மோகனதாஸ் (வயது 37), ஸ்ரீஸ்கந்தவேல் (வயது63), மோகனபவான் (வயது36), சிவனேசன (வயது44), சந்தனாதேவி (வயது45)பரிமளா (வயது55) (சோ)

# ரெலோ-ஈ.பி.டி.பி.யினர் யாழ்ப்பாணத்தில் முறுகல்

(யாழ்ப்பாணம்)

ரெலோ உறுப்பினர்களின் பிரச்சாரத்தைத் தடுக்க முற்பட்ட ஈ.பி.டி.பி.யினருக்கும், ரெலோ உறுப்பினர்களுக்குமிடையில் யாழ்ப்பாணத்தில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

நேற்று (10.03) யாழ் ஆரியகுளச்சந்தி மற்றும் காங்கேசன்துறை வீதிப்பகுதிகளில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

தமிழ் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு ஆதரவாக மேற்படிப் பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ அமைப்பின் உறுப்பினர்களை அவ்விடத்தில் பிரச்சாரம் செய்யவிடாது தடுத்த ஈ.பி.டி.பி.யினர் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோரை வீடியோப் படம் பிடிக்கும் நடவடிக்கையிலும ஈடுபட்டதால் இருதரப்பினருக் கிடையே அப் பகுதியில் பெரும் மோதல்நிலை உருவானது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிசாரும், இராணுவத்தினரும் இருபகுதியினரையும் சமாதானப் படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் ஈ.பி.டி.பி.யினரை அவர்களது முகாமிற்குச் செல்லுமாறும் பணித்தனர். இதனால் மோதல் சுமுகமான நிலைக்கு வந்தது.(33)

–ஆசிரிய சேவை 3–II இற்கு ஆட்சேர்ப்பதற்கான–

# திருத்திய வர்த்தமானி அறிவிப்பு வெளிவந்துள்ளது

(அலுவலகசெய்தியாளர்)

மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாச்சார அமைச்சினால் வடகிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அரசாங்க தமிழ்மொழி மூலப பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரிய சேவையின் 3-II வகுப்பைச் சேர்ந்த தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு விணணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான 13டிசம்பர் 2003 மற்றும் 23 சனவரி 2004 வர்த்தமானிகளில் வெளிவந்துள்ள விபரத்தின் திருத்தம் 19 பெப்ரவரி 2004இல் வெளியிடப்பட்டு தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பமுடிவு திகதி 26 மார்ச் 2004 ஆகும். விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.(சோ)

# தமிழ் மக்கள் தடைகள் ஏதுமின்றி தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும்

## இளம்பரிதி நோர்வேக் குழுவிடம் கோரிக்கை

(வடமராட்சி)

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத தேர்தலில் தமிழ்மக்களுக்கு தடைகள் ஏதும் விதிக்கப்படாதும், சோதனை நடவடிக்கைகளிற்கு உட்படுத்தப்படாதும் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்படவேண்டும். இதன் மூலமே தமிழர் தமது அபிலாசைகளை உலகத்திற்கு புரியவைக்கக் கூடியதாக இருக்கும் எனத்தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த நோர்வே நாட்டின் சமாதானத்தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் உடனான சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை தலைமைப் பணியகத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அவருடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ ப்றட்ஸ்கார்,அரசியல் பிரிவின் 2ம் செயலாளர் லிசா மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தரப்பில் சி.இளம்பரிதி அவர்களுடன் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி யோ.கலைவிழி, மாணவர் அமைப்பின் துணைப்பொறுப்பாளர் மணிவண்ணன், இ.இமையவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தல் நடவடிக்கைகளில் குறிப்பாக சில கட்சிகளிற்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை, மக்களிடையே அச்சஉணர்வை தோற்றுவித்து வருகின்றது. இதேவேளை முகமாலைப 'பகுதியில் கொத்தணி முறையிலான வாக்குச் சாவடிகள் நிறுவப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அது எமது பகுதியிலோ அல்லது இராணுவத்தின் பகுதியிலோ அமையலாம். ஆனாலும் அவ்வாக்குச்சாவடிகளுக்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கிளிநொச்சி மற்றும் மருதங்கேணிப்பகுதி வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ள போதும் இயல்பு நிலை தோன்றியிருக்கவில்லை. அண்மைக்காலமாக படைத்தரப்பின் தலையீடுகள் அதிகரித்து வருவதால் இயல்பு நிலை மீண்டும் மோசமாக பாதிக்கப்பட்டு வருவதாகவும இளம்பரிதி நோர்வே குழுவினரிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக குழுவினர் காலை 10.00 மணியளவில் யாழ். ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து ஆயர் அதிவண தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அதைத தொடர்ந்து யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த குழுவினர் அரச அதிபருடனும் பேச்சுக்களை நடாத தினர்.

இதனிடையே பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் கோயில் வீதியிலுள்ள யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத்திற்கு விஜயம் செய்த குழுவினர் இணையப்பிரதிநிதிகளை சந்தித்து குடாநாட்டின் நிலை தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் இணையத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், செயலாளர் ஜே.ஜோசப், திருமதி. பொ.இராஜேஸ்வரன் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர். (27)


## சாவு அறிவித்தல்

### சண்முகநாதன் வள்ளிநாயகி

நீத்தியடி பிள்ளையார் கோயிலடி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகநாதன் வள்ளிநாயகி 10.03.2004 நேற்று சாவடைந்தார்.

அன்னார் பாஸ்கரன், கருணாகரன், வசந்தி, கலாவதி,கிருஷாம்பாள், காஞ்சனா, யசோதா, வாசுகி சிவகுமார் (சிவா போராளி) ஆகியோரின் அருமைத் தாயாரும், சுசீலா, (சோபிதா போராளி), சபேசன், சாரதா, சிறீதரன் மனோகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.03.2004 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கன்னாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
பிள்ளைகள்.

(சி- 9329)


### சிறி...

சாதகமாகப் பயன்படுத்தி தென்னிலங்கையைச் சேர்ந்த கும்பல் ஒன்று ஆட்களைக் கடத்திச் சென்று தாக்குதல்களை நடத்துவதோடு குழுமோதல்களையும் தூண்டிவருகிறது.

இக்குழுவினரால் கடந்த திங்கட் கிழமை முஸ்லிம் இளைஞர்கள் சிலர் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக சிறிலங்கா பொலிசாரிடம் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இத் தென்னிலங்கை குழுவினர் தங்கியுள்ள இடங்கள் குறித்தும் பொலிசாரிற்கு தகவல் கொடுத்திருந்தும் பொலிசார் அக்குழுவினரைக் கைது செய்யவோஉரிய நடவடிககையை மேற்கொள்ளவோ இல்லை பொலிசாரின் இந்நடவடிக்கையைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதோடு யாழ். நகரில உள்ள முஸ்லிம்களுடைய வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (33)

### புலிகள்...

தீமரென்று இவர் இப்படியான பிரச்சினைகளைக் கூறிக் கொணடிருக்கின்றார்.

நான் ஏற்கனவே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியாகத்தான் இருக்கின்றேன். கருணாவோடு இருக்கும் போதும் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதியாகத் தான் இருந்தேன். இப்பொழுதும் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டச சிறப்புத் தளபதியாகத்தான் இருக்கின்றேன் ஆனால் நாங்கள மட்டக்களப்புக்கு தளபதியாகச் செல்வதற்கு தலைவருடைய அடுத்த திட்டங்கள், அதாவது மட்டு அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற எங்களுடைய அப்பாவி மக்களுக்கோ அங்கிருக்கின்ற போர்வீரர்களுக்கோ எந்தப் பிரச்சினையும் வராதவண்ணம் அந்த நிர்வாகத்தைப் பொறுப்பெடுக்குமாறு தலைவர் அவர்கள் கூறியிருக்கின்றார். அதற்கமைவான திட்டங்களை தற்பொழுது நாங்கள் வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

### விடுதலைப்...

எனக் கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதியுடனான சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், தேர்தல் நீதியான முறையில் நடைபெற வேண்டும் என்பதில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களிடமும் நான் எடுத்துக் கூறவுள்ளேன் என்று கூறினார்.

முகமாலைப் பகுதியில் இடம பெறவுள்ள தேர்தல் வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென நோர்வே அரசாங்கம் 15 மில்லியன் டொலர்களை செலவு செய்யும்

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் இயல்பாகவும், இராணுவக் கெடுபிடிகள் அற்ற சூழ்நிலையிலும் வாக்களிப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக முகமாலைப்பகுதியில் உள்ள தமது முன்னணிக்காவரண்களை பின்நோக்கி நகர்த்தி ஒத்துழைப்பு வழங்குவதாகஉறுதியளித்துள்ளனர். இதனால் சுதந்திரமாக மக்கள் வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறு புலிகள் செய்துள்ள விட்டுக்கொடுப்புக்கள் பாராட்டத் தக்கது. எனவே இவ்வாறான பிரதேசத்தில் வைத்து சுதந்திரமான வாக்கெடுப்புக்களை செய்ய வேண்டும் என்பதை தேர்தல் ஆணையாளர் T.திசநாயக்கவிடம் வலியுறுத்திப் பேசப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

### எரிக்சூல்...

அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக்கை விசேட சமாதானத்தூதர் எரிக்சூல்ஹெய்ம் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் இச்சந்திப்பு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் இடம்பெறும் என்றும் குழுவட்டாரங்கள் தெரிவித்தன. (சோ)(25)

### புலிகளின்...

வர் சோமவன்ச அமரசிங்க கூறுகிறார். அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப்போவதாக சனாதிபதி கூறிவருவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ள பிளவைத் தடுக்க இந்தியா தலையிட வேண்டுமென பிரதமர் வேண்டுகோள் விடுத்ததாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என அமைச்சர் கூறினார். சனாதிபதி தமது நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கி றார். தமது கட்சியின் நலன் கருதியே அவர் தேசிய லொத்தர்சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பவற்றைப் பொறுப்பேற்றுள்ளார். இந்தத் தேர்தலில் அவா சனாதிபதியாகச் செயற்படாது கட்சியின் தலைவியாகச் செயற்பட்டு வருகிறார். எனவே அவரின் கட்டளைகளை நடைமுறைப் படுத்த வேண்டாமென அமைச்சுச் செயலாளர்களைக் கேட்டுக் கொள்வதென அமைச்சரவை தீமானித்துள்ளது. 17ஆவது அரசியலமைப்பு சட்ட மூலத்தின்படி காவல்துறையினரின் செயற்பாடுகளில் சனாதிபதிகது தலையிட முடியாது எனினும் அவர் காவல் துறையினரின் இடமாற்றங்களுக்கு முயற்சி செய்துவருவதாக அமைசசர் குற்றம் சுமத்தினார். அரச ஊடகம விரைவில் மின்சாரத் தடை வரப் போவதாகக் கூறிவருகிறது எனினும் அவ்வாறான நிலை ஒன்றுக்கு வாய்ப்புக்கள் இல்லை. அமைச்சர் கபீர்காசிமின் வாகன மொன்றில், 1.5மில்லியன் ரூபா பெறுமதியான சட்ட விரோத சிகரெட்டுக்கள் இருந்ததாக வெளியிடப்பட்ட தகவல் முற்றிலும் தவறானது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.